DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**SC.No. 56/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | L.W.12 / P.W.13 | District | | புதுக்கோட்டை |
| Name | : | சித்திரைவேல் | Calling | : | கொத்தனார் வேலை |
| Father Name | : | கணேசன் | Age | : | 36 |
| Village | : | அரையப்பட்டி | | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873, on the day of 28.10.2025

**1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் , அரையப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். கொத்தனாராக வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். (சாட்சியிடம் 2ம் எதிரி நீலகண்ட மூர்த்தி என்பவரது ஒப்புதல் வாக்குமூலம் காட்டப்பட்டது). அந்த கையெழுத்தை எதற்கு போட்டேன் என்று எனக்கு தெரியாது. அந்த கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் . தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் என்னுடைய கையெழுத்து எதுவும் இல்லை. (சாட்சியிடம் 11.10.2019 17.15 மணி சம்மந்தப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் காட்டப்பட்டது). இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது . போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் அனுமதி கோரி சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் நான் ஆலங்குடி காவல் நிலையத்திற்கு 11.10.2019ம் தேதி மாலை 4.00 மணிக்கு எனது பாஸ்போர்ட் சம்மந்தமாக சென்றபோது ஆஜர் எதிரிகளை காவல்

நிலையததில் வைத்து விசாரித்தார்கள் என்றும், அப்போது எதிரிகளில் நீலகண்ட மூர்த்தி என்பவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் , அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் பதிவு செய்தார் என்றும், பின்பு அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த தடய பொருட்களை பொறுத்து கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார் என்றும் , அதில் நானும், தங்கவேலு மகன் செல்வம் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் , தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

***Sessions Judge,***
***Additional District Court,***
***Pudukkottai.***